[இங்கு தரப்பெற்றுள்ள "கடைசி வரை நம்பிக்கை" அர்விந்த் குப்தா எழுதியுள்ள "டென் லிட்டில் பிங்கர்ஸ்" (Ten Little Fingers, Arvind Gupta, National Book Trust வெளியீடு) புத்தகத்திலுள்ள "Birds of Peace"-ன் தமிழாக்கம். 2010 ஆம் ஆண்டு சமச்சீர் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழக அரசால் வெளியிடப்பெற்ற ஆறாவது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது "கடைசி வரை நம்பிக்கை" - ஜப்பானிய சிறுமி சடகோ பற்றிய உண்மை வரலாறு]

6

# தமிழ்

தமிழ்நாட்டுப்
பாடநூல் கழகம்



துணைப்பாடம்

# கடைசிவரை நம்பிக்கை

ஒரு சிறுமியின் உண்மை வரலாறு இது. அவள் பெயர் சடகோ. முழுப் பெயர் சடகோ சசாகி. அவள் ஜப்பான் நாட்டுச் சிறுமி.

ஜப்பானில் இரண்டு இடங்களில் அமெரிக்கா குண்டு வீசியது. ஒன்று ஹிரோசிமா; மற்றொன்று நாகசாகி. அக் குண்டுவீச்சில் இரண்டு இலட்சம் ஜப்பானியர் இறந்தனர்.

ஹிரோசிமாவுக்கு அருகில் சடகோ தன் பெற்றோருடன் வசித்து வந்தாள். அப்போது அவளுக்கு இரண்டு வயது. குண்டுவீச்சில் அவள் குடும்பம் தப்பியது.

சடகோ பள்ளியில் சேர்ந்து படித்து வந்தாள். அவளுக்கு 11 வயது ஆனது. ஒருநாள் பள்ளியில் அவள் விளையாடிக்கொண்டு இருந்தாள். அப்போது திடீரென மயக்கம் போட்டு விழுந்தாள். மருத்துவர்கள் அவளைச் சோதித்துப் பார்த்தனர். அவளுக்குப் புற்றுநோய்!

அணுகுண்டு வெடித்தபோது உண்டான கதிர்வீச்சுதான் இதற்குக் காரணம். சடகோவை மருத்துவமனையில் சேர்த்தார்கள். புற்றுநோய் ஆளைக் கொல்லும் என்று சடகோ தெரிந்து கொண்டாள்.

ஆனால், சடகோ சாக விரும்பவில்லை;உயிர்வாழவே ஆசைப்பட்டாள்.ஒரு நாள் சிசுகோ என்ற தோழி, அவளைப் பார்க்க வந்தாள். சிசுகோ கை நிறைய காகிதங்கள் எடுத்து வந்தாள். அந்தக் காகிதங்கள் சதுரம் சதுரமாக வெட்டப்பட்டு இருந்தன. ஒரு காகிதத்தைச் சிசுகோ எடுத்தாள்.

அப்படியும் இப்படியும் மடக்கி ஒரு கொக்கு செய்தாள். ஜப்பானியர் வணங்கும் பறவை – கொக்கு. சிசுகோ சொன்னாள். "சடகோ! கவலைப்படாதே! நான் செய்தது மாதிரி ஆயிரம் கொக்குகள் செய்! நோய் குணமாகும். இது நம் நாட்டு நம்பிக்கை!"


சிறுமி சடகோ

சடகோவுக்கு நம்பிக்கை கிடைத்தது; துணிச்சல் பிறந்தது. நாள்தோறும் கொக்குகள் செய்ய தொடங்கினாள். தொடக்கத்தில் நாள் ஒன்றுக்கு இருபது கொக்குகள் செய்தாள். போகப்போக உடம்பில் வலிமை குன்றியது. அவளால், ஒரு நாளைக்கு மூன்று கொக்குகள்கூடச் செய்ய இயலவில்லை.

தன்னை மரணம் நெருங்கிவிட்டதை உணர்ந்தாள். ஆனாலும், அவள் காகிதக் கொக்கு செய்வதை மட்டும் நிறுத்தவே இல்லை. கொக்கு செய்யும்போது அவள் கவலையை மறந்திருந்தாள்.



ஒரு நாளில் அவளால் ஒரேஒரு கொக்கு மட்டுமே செய்ய முடிந்தது. அதன்பிறகு, அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. 1955ஆம் ஆண்டு அக்டோபர் 25 ஆம் நாள் சடகோ இறந்துவிட்டாள்.

சடகோவின் படுக்கை முழுவதும் காகிதக் கொக்குகள் இருந்தன. மொத்தம் அறுநூற்று நாற்பத்து நான்கு கொக்குகள் இருந்தன. ஆயிரம் கொக்குகளுக்கு இன்னும் முந்நூற்று ஐம்பத்தாறு கொக்குகள் வேண்டும். தோழிகள் கூடி முந்நூற்று ஐம்பத்தாறு கொக்குகள் செய்தனர்; எண்ணிக்கையை ஆயிரம் ஆக்கினர். சடகோவின் விருப்பத்தை நிறைவு செய்தனர்.

காகிதத்தில் உருவங்கள் செய்யும் கலையை ஜப்பானியர் 'ஓரிகாமி' என்று கூறுவர்.

தன் வாழ்நாளின் இறுதிவரை நம்பிக்கையுடன் வாழ்ந்தவள் சடகோ. தான் தொடங்கிய செயலை அவள் நிறுத்தவே இல்லை.

அவளுக்கு ஒரு நினைவாலயம் கட்டவேண்டுமெனத் தோழிகள் நினைத்தார்கள். அதற்காகப் பொதுமக்களிடம் நிதி திரட்டினார்கள். ஹிரோசிமாவின் நகரின் மையத்தில் நினைவாலயம் கட்டினார்கள். அதனுள் சடகோவுக்குச் சிலை வைத்தார்கள். அதற்குக் 'குழந்தைகள் அமைதி நினைவாலயம்' என்று பெயர் சூட்டினார்கள்.

நினைவாலயத்தில் பின்வருமாறு எழுதி வைத்தார்கள்.

இது எங்கள் கதறல் ! இது எங்கள் வேண்டுதல் !

உலகத்தில் அமைதி வேண்டும் !

(நாள்தோறும் நூற்றுக்கணக்கான குழந்தைகள் அந்த நினைவாலயம் வருகின்றனர். காகிதக் கொக்குகள் செய்து சடகோ சிலைக்கு அணிவிக்கின்றனர்.)

நன்றி : அரவிந்த குப்தா எழுதிய 'டென் லிட்டில் பிங்கர்ஸ்'.